செய்தி நான்கு

# நம் கலாச்சாரத்தை இடமாற்றவும், புதிய எருசலேமைப்போல புதிதாக மாறுவதன்மூலம் நிஜத்தில் ஒரே புதிய மனிதனாக ஆகவும், உயிர்த்தெழும் ஜீவனின் பசுமையான நிரப்பீட்டைக்கொண்டு நாள்தோறும் புதிதாக்கப்படுதல்

வேத வாசிப்பு: 2 கொரி. 4:16; எபே. 2:15-16; 4:22-24; கொலோ. 3:10-11

**I. எபேசியர் 4:22 கூறுகிறது, "உங்கள் முந்தைய வாழ்க்கை முறைக்குரிய,...பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு" (கிரே.):**

A. பழைய மனிதன், நம் ஆத்துமாவிலுள்ள நம் இயற்கை ஜீவனைக் குறிக்கிறது; பழைய மனிதன் என்பது தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு, ஆனால் பாவத்தின்மூலம் விழுந்துபோன நம் சாட்சாத்து ஆள்தத்துவமாகும்—ரோ. 6:6:

1. தன்னிடமுள்ள எல்லாவற்றோடும்கூட பழைய மனிதன், சபை வாழ்க்கைக்கு ஒரு சேதமாக இருக்கிறது; பழைய மனிதன் இருக்கும் இடத்தில், சபை இருக்க முடியாது; நாம் என்னவாக இருக்கிறோம், நம்மிடம் என்ன இருக்கிறது, நாம் என்ன செய்கிறோம் ஆகியவையெல்லாம் சபை வாழ்க்கையை சாத்தியமற்றதாக்குகிறது.
2. நாம் தொடர்ச்சியாக பழைய மனிதனின்படியே வாழ்ந்தால், சபை வாழ்க்கை கடுமையாக சேதமடையும், அது முடிந்தேபோய்விடும்; நாம் பழைய மனிதனை அதன் முந்தைய வாழ்க்கைமுறையோடுகூட களைந்துபோட்டால், புதிய எருசலேமின் சிற்றுருவாக இருக்கப்போகிற சபை வாழ்க்கையான ஓர் அற்புதமான சபை வாழ்க்கை நம்மிடம் இருக்கும்; அப்படிப்பட்ட சபை வாழ்க்கையில் பிரிவினை எழுவது சாத்தியமே இல்லை.

B. வாழ்க்கைமுறை என்ற வார்த்தைகள், பெருமளவு காரியத்தை மறைவாகக் காட்டுகிறது; உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மக்கள் மத்தியிலும் அவர்களின் தனிச்சிறப்பான வாழ்க்கைமுறை இருக்கிறது:

1. முந்தைய வாழ்க்கை முறை என்பது நம்மோடு தொடர்புடைய எல்லாவற்றையும் உள்ளடக்குகிறது; நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்கிறோமோ, நம்மிடம் என்ன இருக்கிறதோ அவை யாவற்றையும் களைந்துபோட வேண்டும்; நாம் வாழும் விதம், நம் கலாச்சாரம் ஆகியவற்றை நாம் களைந்துபோட வேண்டும்; நம் கலாச்சாரம் எவ்வளவு பலமாக இருக்கிறதோ, அவ்வளவாய் நாம் மற்றவர்களை விமர்சிப்போம்—ஒப். எபே. 4:31-32; கொலோ. 3:12-14.
2. நாம் புதிதாக்கப்பட உண்மையாகவே வாஞ்சித்தால், நாம் வாழும் விதம் மற்றும் நம் கலாச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்குகிற முந்தைய வாழ்க்கைமுறையை நாம் களைந்துபோட வேண்டும்; புதிய மனிதனில் கிரேக்கர், யூதர், அந்நியன், சித்தியன், அடிமை, சுயாதீனன் ஆகியோர் இருக்க சாத்தியமில்லை, ஏனென்றால், இந்த வெவ்வேறு மக்கள் மத்தியில் காணப்பட்ட முந்தைய வாழ்க்கைமுறை ஒதுக்கித்தள்ளப்பட்டுவிட்டது.
3. நாம் பழைய வாழ்க்கைமுறைக்குத் திரும்பும்போதெல்லாம், நாம் உள்ளாக இருளடைந்து தேவனின் ஜீவனுக்கு அந்நியமாக்கப்படுகிறோம் என்று நாம் புறத்தூண்டுதலின்றி உணர்வோம்—எபே. 4:17-19.
4. சபை வாழ்க்கை வாழ, வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் முந்தைய வாழ்க்கைமுறையில் ஊனுருகொண்டுள்ள பழைய மனிதனைக் களைந்துபோட வேண்டும்; சபை வாழ்க்கையில் கிறிஸ்துவுக்கு மட்டுமே இடம் உண்டு—கொலோ. 3:10-11.
5. சபைகள் என்று அழைக்கப்படுபவை தேசியத்தின் அடிப்படையில் உருவாக்கப்படுவதைப் பார்ப்பது எவ்வளவு வருந்தத்தக்கது; நாம் நம் பாரம்பரியத்தைப் பொக்கிஷமாக கருதுவதற்கு பதிலாக, அதை மறுக்க வேண்டும்; நாமாகவே நம் பழைய சமுதாய வாழ்க்கையை விரும்புகிறோம், ஆனால், நாம் வாழும் விதம், சுபாவத்திலும், முறையிலும், நடைமுறையிலும் முழுக்க முழுக்க புதிதாக மாற வேண்டும்.

**II. எபேசியர் 2:15-16இலுள்ள புதிய மனிதன் கூட்டு மனிதன் என்பதால், 4:24இலுள்ள புதிய மனிதனும்கூட கூட்டு மனிதனாகத்தான் இருக்க வேண்டும்; எபேசியர் 4:24இன்படி, கிறிஸ்துவில் ஏற்கெனவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற சாட்சாத்து புதிய மனிதனை நாம் தரித்துக்கொள்ள வேண்டும்:**

A. ஞானஸ்நானத்தில் நாம், கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டு அடக்கம்பண்ணப்பட்ட பழைய மனிதனைக் களைந்துபோடுகிறோம்; ஞானஸ்நானத்தில் நாம், புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளவும் செய்கிறோம்—வவ. 22-24; ரோ. 6:6, 4.

B. பழைய மனிதனைக் களைந்துபோடுவதும் புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதும் நிறைவேற்றப்பட்ட உண்மைகள்; இப்போது, நம் மனதின் ஆவியில் புதிதாக்கப்படுவதன்மூலம், இந்த உண்மைகளை நாம் அனுபவமாக்கி உணர்ந்தறிய வேண்டும்—எபே. 4:23:

1. பழைய மனிதனைக் களைந்துபோடுவதென்றால், சுயத்திற்கு சிலுவையைப் பிரயோகித்து நம் பழைய சுயத்தை மறுதலிப்பதாகும், கைவிடுவதாகும்—வ. 22; மத். 16:24.
2. புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதென்றால் இயேசு கிறிஸ்துவின் ஆவியின் உதாரத்துவமான நிரப்பீட்டின்மூலம் கிறிஸ்துவை வாழ்ந்து பெரிதாக்கிக் காண்பிப்பதாகும் (பிலி. 1:19-21); இது புதிய மனிதனை சிருஷ்டிப்பதில் கிறிஸ்து நிறைவேற்றியிருப்பதை பிரயோகிப்பதாகும்—எபே. 2:15; 4:24.

C. தேவனுடைய ஆவியோடு கலந்திணைந்திருக்கும் நம் ஆவி நம் மனதின் ஆவியாக வேண்டும் (வ. 23); அப்போது நம் முழு வாழ்க்கையும் ஆவியினால் இருக்கும், நாம் செய்வதெல்லாம் ஆவியின்படி இருக்கும்; நாம் இந்த ஆவியால் புதிதாக்கப்படுகையில், நாம் புதிய மனிதனைத் தரித்துக்கொள்கிறோம்.

D. நம் மனதிற்குள் பரவி அதை நிரப்புகிற கலந்திணைந்த ஆவியின்படி நாம் நடக்க வேண்டும்; இந்த விதத்தில் புதிய மனிதனின் அனுதின நடை மனதின் ஆவியில் இருக்கும்; இதுவே சபை வாழ்க்கையின் இரகசியம்—வ. 23.

E. புதிய மனிதன் நம் ஆவியில் இருக்கிறது; தேவன், தேவனுடைய குடியிருப்பு, புதிய மனிதன் ஆகியோர் இருக்கும் இடமாகிய (ஆவியானவரோடு கலந்திணைந்துள்ள) நம் ஆவி, நம் மனதின் ஆவியாவதே, புதிய மனிதனைத் தரிந்துக்கொள்வதற்கான வழி—2:22; 4:23:

1. ஆவி நம் மனதின் ஆவியாவதென்றால், ஆவி நம் மனதை வழிநடத்துகிறது, கட்டுப்படுத்துகிறது, ஆளுகைசெய்கிறது, ஆட்கொள்கிறது, அதை உடமையாக்குகிறது என்று அர்த்தம் (ஒப். 1 கொரி. 2:15-16; 2 கொரி. 2:13; 10:4-5); ஆவி நம் மனதை வழிநடத்தும்போது, நம் முழு ஆள்தத்துவமும் நம் ஆவியின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது.
2. நாம் எவ்வளவாய் புதிய மனிதனைத் தரித்துக்கொள்கிறோம் என்பது, நம் ஆவி நம் ஆள்தத்துவத்தை எவ்வளவாய் வழிநடத்துகிறது என்பதைச் சார்ந்திருக்கிறது (1 கொரி. 2:15); நம் ஆவி நம்மை ஆளுகைசெய்து வழிநடத்தும்போது, கலாச்சாரத்துக்கோ, அபிப்பிராயங்களுக்கோ, அல்லது சட்டதிட்டங்களுக்கோ எந்தத் தளமும் கிடையாது; நம் வழிக்கு எந்த இடமும் இல்லை, ஏனென்றால், நம் முழு ஆள்தத்துவமும் நம் ஆவியால் ஆளுகைசெய்யப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, ஆட்சிசெய்யப்பட்டு, வழிநடத்தப்படுகிறது.
3. லந்திணைந்த ஆவி எவ்வளவாய் நம் மனதை ஊடுருவவியாபித்து, பூரிதமாக்கி, அதை உடைமையாக்குகிறதோ, அவ்வளவாய்க் கிறிஸ்துவின் மனம் நம் மனமாகிவிட நாம் அனுமதிக்கிறோம்—பிலி. 2:5; 1 கொரி. 2:16; ரோ. 12:2.

F. நாம் கர்த்தராகிய இயேசுவில் விசுவாசித்தபோது, ஜீவன்-தரும் ஆவி நம் ஆவிக்குள் வந்து, புதிய மனிதனை முழுமைபெற்ற உற்பத்தியாக தம்மோடு கொண்டுவந்தார்; இப்போது இந்தப் புதிய மனிதன் நம் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியையும் பூரிதமாக்கி, அதற்குள் பரவ வேண்டும்; இந்தப் பரவுதலே புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதாகும், புதிதாக்குவதாகும்.

G. நாம் மனதின் மாயையின்படி வாழாமல், மனதின் ஆவியின்படி வாழவேண்டும்; இதுவே கூட்டு ஒரே புதிய மனிதனின் அனுதின வாழ்க்கைக்கான திறவுகோலாகும், அதாவது, தேவனின் குணம், கிறிஸ்துவின் நறுமணம், ஆவியானவரின் ஒருமை ஆகியவற்றைக்கொண்டு நிரப்பப்பட்ட சபை வாழ்க்கையை வாழ்வதற்கான இரகசியமாகும்—எபே. 4:3-4, 17-18, 23-24.

H. நாம் கர்த்தரை நேசிப்பதன்மூலமும் ஜெபத்திலும் தினமும் வார்த்தையை வாசிப்பதிலும் நம் ஆவியைப் பயிற்சி செய்வதன்மூலமும் நம் மனம் கலந்திணைந்த ஆவியால் நிரப்பப்படுகிறது; இது நம் மனதை மாற்றி அதைப் புதிதாக்குகிறது; நாம் நம் மனதில் புதுப்பிக்கப்படுவதென்றால், மனித வாழ்க்கைக்குரிய காரியங்களைக் குறித்த எல்லா பழைய கருத்துக்களையும் கைவிட்டு, பரிசுத்த வேதவாக்கியத்தின் போதனையினாலும் பரிசுத்த ஆவியின் பிரகாசித்தலாலும் நாம் மீண்டும் புதிதாக்கப்படுவதாகும்—சங். 119:105, 130; 2 தீமோ. 3:15-17; உபா. 17:18-20.

I. நிஜத்தில் ஒரே புதிய மனிதனைக் கொண்டிருக்க வேண்டுமென்ற தேவனுடைய குறிக்கோள் இந்த யுகத்தில் நிறைவேற்றப்படுதல், நாம் அனைவரும் நம் மனதின் ஆவியில் புதிதாக்கப்பட சித்தமாயிருந்தால் மட்டுமே சாத்தியம்.

**III. கொலோசெயருக்குப் பவுல் எழுதிய வார்த்தையின் மையக் குறிப்பு, தேவனுடைய சாயலான கிறிஸ்துவைப் பற்றிய முழு அறிவுக்கென்று மனம் புதிதாகுவதைப் பற்றியது; புதிய மனிதன் நம் ஆவியில் சிருஷ்டிக்கப்பட்டான், இப்போது, கிறிஸ்துவின் சாயலின்படி முழு அறிவுக்கென்று நம் மனதில் புதிதாக்கப்பட்டுவருகிறான்—எபே. 2:15; கொலோ. 3:10-11:**

A. புதிய மனிதன் பழைய சிருஷ்டிப்புக்குரிய நம்மைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டதால், அவன் புதிதாக்கப்பட வேண்டும்; இந்தப் புதிதாகுதல், முழு அறிவுக்கென்று என்னும் சொற்றொடாரால் சுட்டிக்காட்டப்படுகிறபடி, பிரதானமாக நம் மனதில் நடைபெறுகிறது—வ. 10.

B. தேவனின்படி புதிய மனிதனின் சிருஷ்டிப்பு, ஏற்கெனவே முடிந்துவிட்டது, ஆனால், நம் அனுபவத்திலோ இந்தப் புதிய மனிதன் முழு அறிவுக்கென்று சிறிது சிறிதாகப் புதிதாக்கப்பட்டுவருகிறான்; நாம் எவ்வளவாய் புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுகிறோமோ, அவ்வளவாய் நாம் தேவன் என்னவாக இருக்கிறாரோ அதன்படி புதிதாக்கப்படுகிறோம், அவ்வளவாய் நம்மிடம் அவரது சாயல், அதாவது, அவர் என்னவாக இருக்கிறாரோ அதன் வெளியாக்கம் இருக்கிறது—வ. 10.

C. புதுபிக்கப்படுவதென்றால், நம் பழைய மூலக்கூறை இடமாற்றி வெளியேற்ற நம் ஆள்தத்துவத்திற்குள் தேவனுடைய மூலக்கூறு சேர்க்கப்படுவதாகும்—வெளி. 21:5; 2 கொரி. 5:17; ரோ. 12:2; 2 கொரி. 4:16:

1. நம் இயற்கையான மற்றும் தேசிய மனநிலை நமது இன மற்றும் கலாச்சாரப் பின்னணிக்கு ஏற்ப கற்பிக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்டது; இது புதிய மனிதனின் நடைமுறை இருத்தலுக்கு மிகப்பெரிய தடையாக விளங்குகிறது.

2. ஒரே புதிய மனிதன் முழு இருத்தலுக்குள் வர, நம் தேசியம் மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டுள்ள நம் மனம் முற்றிலும் புதுப்பிக்கப்படுவதை நாம் அனுபவித்தாக வேண்டும்.

D. புதிது என்றால் தேவனே; எனவே, புதிதாவதென்றால் தேவத்துவத்திலல்ல, மாறாக ஜீவனிலும் சுபாவத்திலும் தேவனாவதாகும்:

1. தேவன் என்றென்றும் புதியவர், அவர் நம் முழு ஆள்தத்துவத்தையும் புதிதாக்கும்படி தம் என்றும்-புதிதான சாராம்சத்தை நம் ஆள்தத்துவத்திற்குள் உட்செலுத்துகிறார்—ரோ. 12:2; கொலோ. 3:10.

2. தேவனுடைய ஆவி, நம் உள்ளான பகுதிகளை என்றென்றும் புதிதான, ஒருபோதும் பழமையடையாத, என்றென்றும் இருக்கிற, ஒருபோதும் மாறாத தேவனுடைய குணாம்சங்களைக்கொண்டு உட்செலுத்தி நம்மைப் புதுப்பிக்கிறார்—வெளி. 21:5.

3. புதுப்பிக்கும் ஆவி, நம்மைப் புதிய சிருஷ்டிப்பான புதிய மனிதனாக்க, நம் ஆள்தத்துவத்திற்குள் புதிய மனிதனின் தெய்வீக சாரம்சத்தை உட்பகிர்கிறார்—தீத்து. 3:5; 2 கொரி. 5:17; கலா. 6:15.

**IV. நம் கலாச்சாரத்தை இடமாற்றவும், புதிய எருசலேமைப்போல புதிதாக மாறுவதன்மூலம் நிஜத்தில் ஒரே புதிய மனிதனாக நாம் ஆகவும், உயிர்த்தெழும் ஜீவனின் பசுமையான நிரப்பீட்டைக் கொண்டு நாம் நாள்தோறும் புதிதாக்கப்பட்டுவருபவர்களாக இருக்க வேண்டும்— 2 கொரி. 4:16:**

A. புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுதல் ஒரே முறையாக நடைபெற்று முடிந்துவிடுவதில்லை; இதற்கு மாறாக, இது வாழ்நாள் முழுவதும் நடைபெறும் காரியமாகும், நம் கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் நிகழும் ஒரு படிப்படியான வழிமுறையாகும்.

B. புதிய மனிதனின் பகுதிகளான மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட விசுவாசிகளான நாம், உயிர்த்தெழுதலில் தெய்வீக ஜீவனின் புதுத்தன்மையில் நடக்கவும் ஆவியின் புதுத்தன்மையில் சேவிக்கவும் வேண்டும்—ரோ. 6:4; 7:6.

C. விசுவாசிகள் எல்லாரும் ஜீவனின் புதுத்தன்மையில் நடந்து புதிய எருசலேமாக ஆவதாலும் (6:4), ஆவியின் புதுத்தன்மையில் சேவித்து புதிய எருசலேமைக் கட்டியெழுப்புவதாலும் (7:6), அவர்கள் புதிய எருசலேமைப்போல் புதிதாக இருக்க புதிதாக்கப்பட வேண்டும்.

D. நம் மனதின் ஆவியில் நாம் புதிதாக்கப்படுதல், நம் உள்ளான மனிதனின் புதிதாகுதலுக்காக நம் சுற்றுச்சூழலின் காரணமாகப் பாடுபடுவதால் நம் புறம்பான மனிதன் பட்சிக்கப்படுதல்மூலம் கிறிஸ்துவின் சாயலாக நம் அனுதின மறுசாயலாகுதலுக்காக இருக்கிறது—2 கொரி. 4:16:

1. நாம் பாடுகள் மத்தியில் இருக்கையில், புதிதாகுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், நாம் கடந்துசெல்லும் பாடுகளால், நமக்கு ஒரு பயனுமில்லை; நமக்குள் நம் ஆவி என்ற ஒரு புகலிடம் இருக்கிறது—சங். 91:1; 27:5; 31:20; ஏசா. 32:2; 2 தீமோ. 4:22; கலா. 6:17-18.

2. நாளுக்கு நாள் சிறிது சிறிதாக நம் புறம்பான மனிதன் பட்சிக்கப்பட்டு, உயிர்த்தெழும் ஜீவனான ஆவிக் கிறிஸ்துவின் பசுமையான நிரப்பீட்டால் நம் உள்ளான மனிதன் புதிதாக்கப்படுமாறு, தேவன் நம் சுற்றுச்சூழலை ஏற்படுத்துகிறார்—2 கொரி. 4:16.

E. நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுவதற்கு, நாம் ஒவ்வொரு காலையிலும் புத்துயிரடைய வேண்டும்—மத். 13:43; லூக். 1:78-79; நீதி. 4:18; நியா. 5:31; 2 கொரி. 4:16.

F. நாம் தினமும் நான்கு காரியங்கள்மூலம் புதிதாக்கப்படுகிறோம், அவை: சிலுவை (வவ. 10-12, 16-18); நம்மை மறுசீராக்கி, மறு ஆக்கம்செய்து, மறுவடிவமைக்கிற பரிசுத்த ஆவி (தீத்து 3:5); நம் கலந்திணைந்த ஆவி (எபே. 4:23); தேவனுடைய பரிசுத்த வார்த்தை (5:26) ஆகும்.

G. நாம் கர்த்தருடைய பந்திக்குப் புதுத்தன்மையில் வரவேண்டும் (மத். 26:29); கர்த்தர் ஒருபோதும் ஒரு பழைய பந்தியில் பங்குகொள்வதில்லை; நாம் “நான் மனம் வருந்துகிறேன்; என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறுவதற்குக் கற்றுக்கொள்வதன்மூலம் புதிதாக்கப்பட வேண்டும்.

**V. புதிய மனிதனின் புதிதாகுதல், நாம் மேலானவற்றை நாடுவதைச் சார்ந்திருக்கிறது—கொலோ. 3:1-2; எபே. 2:5-6:**

A. மேலானவற்றை நாடுவதென்றால், தம் பரலோக ஊழியத்தில் உள்ள கிறிஸ்துவின் செயல்களுக்கு மாறுத்தரம் அளிப்பதும், அவற்றைப் பிரதிபலிப்பதுமாகும்—எபி. 2:17; 4:14; 7:26; 8:1-2; வெளி. 5:6; கொலோ. 3:1-2:

1. நம் ஆவியில் உள்ள சகலத்தையும்-உள்ளடக்கிய ஆவியின் வழியாகப் பரலோகத்தில் இருக்கும் கிறிஸ்துவிடமிருந்து பூமியில் இருக்கும் நமக்கு ஒரு கடத்துதல் நிகழ்கிறது—எபே. 1:19, 22-23; 2:22:

a. நம் ஆவியே தெய்வீகக் கடத்துதலின் பெற்றுக்கொள்ளும் முனை, பரலோகத்தில் இருக்கும் தேவனுடைய சிங்காசனமோ கடத்தும் முனை—வெளி. 5:6.

b. நம் ஆவிக்குத் திரும்புவதன்மூலம், நாம் பரலோகத்திற்குள் உயர்த்தப்படுகிறோம்; பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்திலிருந்து, நம் ஆவிக்குள் வரும் கடத்துதல் காரணமாக, நாம் இங்கு பூமியில் கிறிஸ்துவை அனுபவமாக்கி அனுபவித்துமகிழும் அதே நேரத்தில் நாம் பரலோகத்தில் இருக்கிறோம்—4:1-2.

2. தம் பரலோக ஊழியத்தில் கிறிஸ்து மக்களை மேய்த்துப்பேணுகிறார், நாம் மக்களை மேய்த்துப்பேணுவதின்மூலம் அவருடன் ஒத்துழைக்க வேண்டும்; இந்த ஐக்கியம் நம்மால் பெற்றுக்கொள்ளப்படுமென்றால், கர்த்தரைத் திரும்பக் கொண்டுவரும் ஒரு மிகப்பெரிய எழுப்புதல் பூமியில் ஏற்படும்—1 பேது. 5:1-4; ஒப். மத். 9:36; 10:1-6; யோவா. 21:15-17; 1 பேது. 2:25; எபி. 13:20.

B. தம் எல்லா செயல்பாடுகளோடுகூடிய பரலோகக் கிறிஸ்துவிடமாக நாம் திரும்பி, இவற்றின்மேல் நம் மனதைப் பொருத்தினால், புதிய மனிதனின் புதிதாகுதல் புறத்தூண்டுதலின்றி நடைபெறும்—8:1-2; 12:2; கொலோ. 3:2.

C. இது புதிய எருசலேமில் முழுநிறைவடைய விசுவாசிகளைப் புதிய சிருஷ்டிப்பான புதிய மனிதனாக ஆக்குவதில் தேவனின் நோக்கத்தை முழுநிறைவாக்குகிறது; தேவனுடைய வேலையின் தலைசிறந்த படைப்பான இந்தப் புதிய மனிதன், பிரபஞ்சத்தில் முழுக்க முழுக்க ஒரு புதிய காரியமாகும், தேவனின் புதிய கண்டுபிடிப்பாகும்—வவ. 10-11; 2 கொரி. 5:17; கலா. 6:15-17; எபே. 2:10, 15.

D. தேவனுடைய இலக்கு ஒரே புதிய மனிதனின் இறுதி முழுநிறைவேற்றமாக இருக்கப் போகிற புதிய எருசலேமில் உச்ச நிலையாக முழுநிறைவடையும் ஒரே புதிய மனிதனை பெறுவதே ஆகும்.

*© 2020 Living Stream Ministry*